1414

# Avinashilingam Institute for Home Science and Higher Education for Women

Deemed to be University Estd. u/s 3 of UGC Act 1956, Category A by MHRD (now MoE)
Re-accredited with A++ Grade by NAAC. CGPA 3.65/4, Category I by UGC
Coimbatore - 641043, Tamil Nadu, India

**Bachelor's Degree Examination - May 2025**
**II Semester**

**Class : I UG/ 2023 Batch** | **Time : 3 Hours**
**Major : All Majors** | **Max. Marks : 100**

## 23BLT002 பொதுத்தமிழ் தாள் II – அற இலக்கியம்

பயன்கள் :

CO1: நீதி இலக்கியங்களின் வழி அற வாழ்வியலை எடுத்துரைத்தல்.
CO2: அற நூல்கள் எடுத்துரைக்கும் ஒழுக்க நெறிகளைக் கற்பித்தல
CO3: அற இலக்கியங்களின் வழி நன்னெறிகளைக் கற்பித்தல்.
CO4: சமூக வாழ்க்கையில் நிலவுகின்ற சமகால நீதிமுறைகளை இலக்கியங்கள் வழி தெரிந்துகொள்ளச் செய்தல்.
CO5: பா வகைகள் மற்றும் அணிகளைக் கற்பித்தல்.

### பகுதி அ **10 x 1 = 10**

சரியான விடையைத் தேர்ந்தேடுத்து எழுதுக

1. நான்மணிக்கடிகையின் ஆசிரியர் பெயர் யாது? CO1K1
   அ. விளம்பிநாகனார் ஆ. பூதஞ்சேந்தனார்
   இ. நல்லாதனார் ஈ. கணிமேதாவியார்

2. திருமாலின் கண்களுக்கு உவமையாக நான்மணிக்கடிகை எதனைக் கூறுகிறது? CO1K2
   அ. நிலவு ஆ. ஞாயிறு
   இ. தாமரை ஈ. காயாம்பூ

3. ‘ஆரிடம்’ என்ற வடமொழி நூலைத் தழுவி எழுதப்பட்ட தமிழ் நூல் எது? CO2K1
   அ. ஆசாரக்கோவை ஆ. நாலடியார்
   இ. இன்னா நாற்பது ஈ. திரிகடுகம்

4. ‘ஆசார வித்து’ என்பதில் எத்தனை குணங்கள் சுட்டிக்காட்டப்படுகின்றன? CO2K2
   அ. ஏழு ஆ. எட்டு
   இ. ஒன்பது ஈ. பத்து

5. பின்வருவனவற்றில் மருத்துவப் பெயர் பெற்ற நூல் எது? CO3K1
   அ. நான்மணிக்கடிகை ஆ. திருக்குறள்
   இ. ஏலாதி ஈ. பழமொழிநானூறு

6. ‘வேய்’ – பொருள் தருக. CO3K2
   அ. மூங்கில் ஆ. அகில்
   இ. வேம்பு ஈ. வேங்கை

7. __________ குளம் நிறைதல் இல் – நிரப்புக. CO4K1
   அ. பனியால் ஆ. மழையால்
   இ. நீரால் ஈ. மண்ணால்

8. பழமொழி நானூறு எச்சமயப் புலவரால் இயற்றப்பட்டது? CO4K2
   அ. சைவம் ஆ. வைணவம்
   இ. சமணம் ஈ. பௌத்தம்

9. ‘தீயினால் சுட்டபுண் உள்ளாறும் ஆறாதே
   நாவினால் சுட்ட வடு’ - இக்குறள் எந்த அணியைச் சார்ந்தது? CO5K1
   அ. வேற்றுமை ஆ. உவமை
   இ. உருவகம் ஈ. தற்குறிப்பேற்றம்

10. பின்வருவனவற்றில் புறத்திணை நூலாகக் கருதப்படுவது எது? CO5K2
    அ. களவழி நாற்பது ஆ. ஐந்திணை ஐம்பது
    இ. திரிகடுகம் ஈ. இனியவை நாற்பது

## பகுதி - ஆ 5 x 6 = 30

**கீழ்வரும் வினாக்களுக்கு 400 சொற்களுக்கு மிகாமல் இரண்டு பக்க அளவில் விடை எழுதுக**

11.அ. 'நல்லாள் பிறக்கும் குடி' என்றும் 'கேளிரான் ஆய பயன்' என்றும் நான்மணிக்கடிகை எதனைக் குறிப்பிடுகிறது? CO1K3

(அல்லது)

11.ஆ. தூக்கமின்மை, அழகு ஆகிவற்றின் கருத்துரைகளாக நான்மணிக்கடிகை கூறுவனவற்றை எடுத்துரைக்க. CO1K3

12.அ. 'முந்தையோர் கண்ட முறைமை' என்றும் 'யாவரும் கண்ட நெறி' என்றும் ஆசாரக்கோவை விளம்புவதை விவரிக்க. CO2K4

(அல்லது)

12.ஆ. மாணவர் ஆசிரியரிடம் நடந்துகொள்ள வேண்டிய நெறிமுறைகளை விளக்குக. CO2K4

13.அ. 'ஏலாதி' – சிறுகுறிப்பு வரைக. CO3K3

(அல்லது)

13.ஆ. 'விண்ணவர்க்கும் மேலாய் விடும்' என்று ஏலாதி எவற்றைக் குறிப்பிடுகின்றது? CO3K3

14.அ. 'பழமொழி நானூறு' குறித்து விளக்குக. CO4K4

(அல்லது)

14.ஆ. 'முழ நட்பின் சாண் உட்கு நன்று' – சான்று காட்டி விவரிக்க. CO4K4

15.அ. உவமையணி என்பது என்ன? சான்று தந்து விளக்குக. CO5K4

(அல்லது)

15.ஆ. தற்குறிப்பேற்ற அணியைச் சான்றுடன் விரித்துரைக்க. CO5K4

## பகுதி - இ 5 x 12 = 60

**கீழ்வரும் வினாக்களுக்கு 800 சொற்களுக்கு மிகாமல் நான்கு பக்க அளவில் விடை எழுதுக.**

16.அ. நான்மணிக்கடிகை எடுத்துரைக்கும் அறக்கருத்துகளை நும் பாடப்பகுதி வழி புலப்படுத்துக. CO1K4

(அல்லது)

16.ஆ. நான்மணிக்கடிகையின் நற்கருத்துகள் தற்போதைய காலகட்டத்தில் ஏற்புடையனவாக அமைகின்றதா என்பதை ஆராய்க. CO1K5

17.அ. ஒழுங்கற்றவை, நரகத்துக்குச் செலுத்துவன, எண்ணக்கூடாதவை என்று பெருவாயின் முள்ளியார் எவற்றை முன்னிருத்துகின்றார்? CO2K5

(அல்லது)

17.ஆ. வீட்டைப் பேணும் முறைமைகள் எக்காலத்திற்கும் ஏற்றவைதான் என்ற கூற்றை ஆசாரக்கோவை வழி ஆராய்க. CO2K5

18.அ. தாய் போலும் அன்புடையவனின் செயல்களாக ஏலாதி குறிப்பிடுவனவற்றை விவரிக்க. CO3K4

(அல்லது)

18.ஆ. அறிவுடையவர் செயல்களாகவும், விண்ணோர் வணங்கத்தக்க செயல்களாகவும் ஏலாதி உரைப்பவற்றைத் தொகுத்துரைக்க. CO3K5

19.அ. நட்பின் பெருமைகளை பழமொழி நானூறு வழி ஆராய்க. CO4K5

(அல்லது)

19.ஆ. 'நட்பில் இழிவைக் காண இயலாது' என்ற கூற்றைப் பழமொழி நானூறு மூலம் நிறுவுக. CO4K5

20.அ. பதினெண் கீழ்க்கணக்கு நூல்களில் அறநூல்கள் குறித்துக் கட்டுரைக்க. CO5K4

(அல்லது)

20.ஆ. பதினெண் கீழ்க்கணக்கு நூல்களில் அகத்திணை நூல்கள் பற்றித் தொகுத்துரைக்க. CO5K4

**********